## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### முதலாம் வருட/முதலாம் அரையாண்டு கலைமாணித் தேர்வு

2011/2012 (ஜனவரி 2014)

TL 1112 விமர்சன நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு

நேரம்: 2 மணித்தியாலங்கள்

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடை எழுதுக.

---

1. அ. இலக்கிய வரலாறு என்பது யாது? அத்துறையுள் அடக்கப்படவேண்டிய விடயங்கள் யாவை?
   ஆ. சங்க இலக்கியம் பற்றிய ஆய்வுச் சிக்கல்கள் யாவை?
   இ. திணைக்கோட்பாட்டின் சமூக, இலக்கிய முக்கியத்துவத்தினைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

2. அ. அறநெறிக் காலப்பகுதியில் புதியனவாகத் தோன்றிய இலக்கிய வடிவங்கள், யாப்பு முறைகள் யாவை?
   ஆ. காரைக்காலம்மையார் தமிழிலக்கிய வரலாற்றில் பெருமாற்றம் ஏற்படுவதற்கு வழிகாட்டியாய் அமைந்தமை பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

3. அ. கி.பி. 600-900 காலப்பகுதியில் தமிழில் பக்தி இலக்கியங்கள் பெருந்தொகையாகத் தோன்றியமைக்கான காரணங்கள் யாவை?
   ஆ, நாயன்மார், ஆழ்வார் பாடல்களில் பக்தியுணர்வு வெளிப்படுத்தப்படுமாற்றைச் சுருக்கமாக விளக்குக.
   இ. சோழர் காலப் பிற்பகுதியில் தோற்றம்பெற்ற தத்துவ நூல்களை வரிசைப்படுத்துக.

4. அ. 1300- 1800 காலப்பகுதியில் தோன்றிய இலக்கிய வடிவங்கள் யாவை?
   ஆ. இக்காலகட்டத்தில் தோன்றிய அடிமக்கட் சார்புடைய இலக்கியங்கள் பற்றிக் குறிப்பிடுக.
   இ. சித்தர் பாடல்களுட் பொதிந்திருக்கும் சமூக, சமய நோக்கு யாது? சுருக்கமாகத் தருக.

5. அ. தமிழ் இலக்கிய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஏற்படுத்திய மாற்றங்கள் யாவை?
   ஆ. சிறுகதை என்ற இலக்கிய வடிவம் பற்றி யாது கூறுவீர்?
   இ. தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் பின்வருபவர்களுள் யாரேனும் இருவர் பெறும் முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

      1. பாரதி
      2. வ.வே.சு.ஐயர்.
      3. மாதவையா
      4. புதுமைப்பித்தன்
      5. கல்கி